789381

CODE : XI 25

பதிவெண் | | | | | | | |

கால அளவு : 2 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கானது)

## தேர்வு எழுதுபவர்களுக்கான அறிவுரைகள்

வினாத் தொகுப்பைத் திறப்பதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. இவ்வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டது.
2. அச்சுப் பதிவில் ஏதேனும் குறையிருப்பின், உடனடியாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
4. விடைகளை **OMR** விடைத்தாளில் குறிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளிலிருந்து சரியான விடையினைக் கண்டறிந்து அதனை **OMR** விடைத்தாளில் உரிய வட்டத்தில் கருப்பு நிறப் பந்துமுனைப் பேனாவினால் நிழலிட (Shading) வேண்டும். '✓' மற்றும் '✖' ஆகிய குறியீடுகளை **OMR** விடைத்தாளில் குறிக்கக் கூடாது.
6. விடைகளைக் கண்டறிய மேற்கொள்ளும் வழிமுறைகளை வினாத்தொகுப்பின் கடைசியில் அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பக்கத்தில் செய்து கொள்ளலாம். **OMR** விடைத்தாளிலோ அல்லது தனித்தாளிலோ செய்யக்கூடாது.
7. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பையோ அல்லது **OMR** விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.
8. தேர்வு முடிந்த பிறகு **OMR** விடைத்தாளை மட்டும் அறைக்கண்காணிப்பாளரிடம் கொடுக்கவும். வினாத்தொகுப்பைத் தேர்வர் எடுத்துச் செல்லலாம்.
9. ஏதேனும் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏழு இலக்கப் பதிவெண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

**பக்கத்தைத் திருப்பிப் பதிலளிக்கத் தொடங்கவும்.**

P.T.O.

1. 'விருந்தினர்' என்னும் சொல்லின் பொருள் :

(அ) நண்பர் (ஆ) உறவினர் (இ) உற்றார் (ஈ) புதியவர்

2. உவம உருபு இடம்பெற்ற தொடரைத் தேர்க.

(அ) சிலைமேல் எழுத்துபோல (ஆ) மழைமுகம் காணாப் பயிர்

(இ) கண்ணினைக் காக்கும் இமை (ஈ) தாமரை இலை நீர்

3. நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

- இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களுக்கான தமிழ் எண்ணுரு வரிசையைத் தேர்ந்தெடுக்க.

(அ) ச, சு, க௦, அ (ஆ) சு, ச, க௦, அ

(இ) ௩, ச, க௦, எ (ஈ) ௩, சு, க௦, எ

4. ''நெல்லுக்குள்ளிருந்து அரிசி தலைகாட்டுவது போல, வெள்ளை விழிகள் இமைகளின் இடுக்குகளில் ஒளிகாட்டிய வண்ணமிருந்தன'' என்னும் உவமையைக் கையாண்டவர் :

(அ) சுரதா (ஆ) கண்ணதாசன்

(இ) கலைஞர் (ஈ) கு.ப. ராஜகோபாலன்

5. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் - சிலப்பதிகாரம்

(ஆ) வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் - ஔவை குறள்

(இ) வளி மிகின் வலி இல்லை - புறநானூறு

(ஈ) நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் - திருமந்திரம்

6. **கூற்று (1)** : சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் மொழிபெயர்ப்பு முயற்சிகள் செய்யப்பட்டன.

**கூற்று (2)** : தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.

(அ) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** சரி

(ஆ) **கூற்று (1)** சரி; **கூற்று (2)** தவறு

(இ) **கூற்றுகள்** இரண்டும் தவறு

(ஈ) **கூற்றுகள்** இரண்டும் சரி

7. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | தேம்பாவணி | (i) | பரஞ்சோதி முனிவர் |
| (2) | பரிபாடல் | (ii) | அதிவீரராம பாண்டியர் |
| (3) | திருவிளையாடற் புராணம் | (iii) | கீரந்தையார் |
| (4) | காசிக் காண்டம் | (iv) | வீரமாமுனிவர் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)
(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i)

8. ''உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்''
- இவ்வடிகளில் அமைந்துள்ள அடிமோனையைத் தேர்க.

(அ) உரு அறிவாரா - ஊழியும்
(ஆ) உரு அறிவாரா - உந்துவளி
(இ) உந்து வளி - ஊழி ஊழ்
(ஈ) ஊழியும் - கிளர்ந்த

9. ''ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்து தொண்டியோர்''
- என்று இன்றைய தொண்டி நகரைக் குறிப்பிடும் நூல் :

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை
(இ) வளையாபதி (ஈ) குண்டலகேசி

10. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :
(அ) சிங்கப்பூர் (ஆ) மலேசியா (இ) இலங்கை (ஈ) இந்தியா

11. ''கூர்வேல் குவை இய மொய்ம்பின்
தேர்வண் பாரிதண் பறம்பு நாடே!''
- என்னும் புறநானூற்றுப் பாடலடிகளில் குறிப்பிடப்படும் மலை.

(அ) கொல்லி மலை (ஆ) சேர்வராயன் மலை
(இ) ஏலகிரி மலை (ஈ) பிரான் மலை

12. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.
(அ) செங்காந்தள் - நிறப்பண்பு
(ஆ) இன்மொழி - சுவைப்பண்பு
(இ) வட்டத்தொட்டி - வடிவப்பண்பு
(ஈ) வெண்சங்கு - அளவுப்பண்பு .

13. பாப்பத்தே! நற்கணக்கே! என்பனவற்றின் இலக்கணக் குறிப்பு :
(அ) எண்ணுப் பெயர், விளித்தொடர்
(ஆ) பண்புத் தொகை, எண்ணுப் பெயர்
(இ) விளித்தொடர், எண்ணுப் பெயர்
(ஈ) விளித்தொடர், விளித்தொடர்

14. அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரண்டிலும் இடம்பெறும் திணைகளைத் தேர்ந்தெடுக்க.
(அ) பெருந்திணை, வெட்சி
(ஆ) மருதம், பெருந்திணை
(இ) கைக்கிளை, பெருந்திணை
(ஈ) கைக்கிளை, பாடாண்திணை

15. பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும் பலமடங்கு தீமையைத் தருவதாகத் திருக்குறள் கூறுவது :
(அ) அறிவுசார் செயல்கள் செய்யாமல் இருப்பது
(ஆ) எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் இருப்பது
(இ) நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுவது
(ஈ) இரக்கமில்லாதவராய் இருப்பது

16. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.
(அ) ''மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே'' - பாவலரேறு
(ஆ) ''சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும்'' - பாவாணர்
(இ) ''உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'' - கண்ணதாசன்
(ஈ) ''கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்'' - கம்பன்

17. ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார் ?
(அ) அன்பு செலுத்துபவர்
(ஆ) பிறருக்கு உதவி செய்பவர்
(இ) சோர்விலாது முயற்சி செய்பவர்
(ஈ) ஆட்சியதிகாரத்தைக் கொண்ட அரசன்

18. சரியான முறையில் அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.
(அ) அவன் நிறம் மையோ ? பச்சை நிற மரகதமோ ? மறிக்கின்ற நீலக்கடலோ ? கார்மேகமோ ?
(ஆ) அவன் நிறம் மையோ ? கார்மேகமோ ? பச்சைநிற மரகதமோ ? மறிக்கின்ற நீலக்கடலோ ?
(இ) அவன் நிறம் கார்மேகமோ ? மையோ ? பச்சைநிற மரகதமோ ? மறிக்கின்ற நீலக்கடலோ ?
(ஈ) அவன் நிறம் பச்சைநிற மரகதமோ ? மையோ ? கார்மேகமோ ? மறிக்கின்ற நீலக்கடலோ ?

19. தேம்பாவணி தொடர்பான கூற்றுகளுள் பொருந்தாததைத் தேர்க.
(அ) தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு தேம்பாவணி
(ஆ) 3 காண்டங்களையும் 36 படலங்களையும் கொண்டது
(இ) தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் ஏசுபிரான்
(ஈ) 17 -ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது

20. கீழ்க்காணும் எண்ணுப்பெயர்களுள் பொது மொழியைத் தேர்ந்தெடுக்க :
(அ) ஆறு (ஆ) மூன்று (இ) ஒன்று (ஈ) எட்டு

21. வினையாலணையும் பெயர் குறித்த சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்க :
(அ) தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்
(ஆ) காலம் காட்டும்
(இ) மூவிடத்திற்கும் உரியது
(ஈ) அனைத்தும் சரி

22. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | வேற்றுமைத்தொகை | (i) | வீசுதென்றல் |
| (2) | வினைத்தொகை | (ii) | மலர்க்கை |
| (3) | உவமைத்தொகை | (iii) | தாய்சேய் |
| (4) | உம்மைத்தொகை | (iv) | மதுரை சென்றார் |

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(ஆ) (1)- (ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(ஈ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

23. தான் பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பேருள்ளம் கொண்ட புலவர் :
(அ) மாங்குடி மருதனார் (ஆ) நச்செள்ளையார்
(இ) பெருந்தலைச் சாத்தனார் (ஈ) பெருஞ்சித்திரனார்

24. சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்தும் செப்பேடு :
(அ) உத்திரமேரூர் செப்பேடு (ஆ) சின்னமனூர்ச் செப்பேடு
(இ) திருவாலங்காட்டுச் செப்பேடு (ஈ) உறையூர்ச் செப்பேடு

25. புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினத்தை எழுதியவர் :
(அ) ஜெயகாந்தன் (ஆ) கி. ராஜநாராயணன்
(இ) சா. கந்தசாமி (ஈ) ப. சிங்காரம்

26. வாழையிலை விருந்து விழாவைக் கொண்டாடி வரும் அமெரிக்காவில் உள்ள தமிழ்ச்சங்கம் :

(அ) மினசோட்டா தமிழ்ச்சங்கம் (ஆ) கலிபோர்னியா தமிழ்ச்சங்கம்

(இ) நியூயார்க் தமிழ்ச்சங்கம் (ஈ) லாஸ்ஏஞ்சல்ஸ் தமிழ்ச்சங்கம்

27. பொருத்தமாக உள்ள இணைகளைத் தெரிவு செய்க :

(1) மண்ணீட்டாளர் - சிற்பி

(2) வெறுக்கை - விலை

(3) கிழி - செல்வம்

(4) தூசு - பட்டு

(அ) (1), (2) சரி (ஆ) (2), (4) சரி (இ) (1), (4) சரி (ஈ) (3), (4) சரி

28. நுட்பமான சூழ்ச்சிகள் அமைச்சரிடம் நெருங்க முடியாமல் இருப்பதற்கான திறன்களாக வள்ளுவர் குறிப்பிடுபவை :

(அ) காலமும் கருவியும் (ஆ) காலமும் நுண்ணறிவும்

(இ) நுண்ணறிவும் கருவியும் (ஈ) நுண்ணறிவும் நூலறிவும்

29. 'பதிந்து' இப்பகுபதத்தில் 'உ' என்பது :

(அ) பெயரெச்ச விகுதி

(ஆ) தொழிற்பெயர் விகுதி

(இ) வியங்கோள் வினைமுற்று விகுதி

(ஈ) வினையெச்ச விகுதி

30. ''ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்

நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு''

- அடிக்கோடிட்ட சொற்களில் அமைந்துள்ள நயம் :

(அ) எதுகை (ஆ) மோனை (இ) இயைபு (ஈ) முரண்

31. ''பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி

விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்''

- இவ்வடிகளில் 'மீனவன்' என்பவன்.

(அ) பெருஞ்சேரல் இரும்பொறை (ஆ) மோசிகீரனார்

(இ) பாண்டிய மன்னன் (ஈ) இறைவன்

32. 'கற்பனை செய்தல்' என்னும் பொருளை உணர்த்தும் மரபுத்தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) மனக்கோட்டை (ஆ) ஆறப்போடுதல்

(இ) கண்ணும் கருத்தும் (ஈ) அள்ளி இறைத்தல்

33. குயில்களின் கூவலிசை; புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும்; இலைகளின் அசைவுகள்; சூறைக்காற்றின் ஆலோலம் - தொடருக்குப் பொருத்தமான தலைப்பைத் தேர்ந்தெடுக்க.

(அ) உயிர்ப்பின் ஏக்கம் (ஆ) நீரின் சிலிர்ப்பு

(இ) காற்றின் பாடல் (ஈ) வனத்தின் நடனம்

34. அரும்பாகி மொட்டாகிப் பூவாகிக் காயாகி .....

- இத்தொடருடன் பொருந்தி வரும் தொடரைத் தேர்க.

(அ) மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து, ஒருவகை அரிசி தோன்றும்.

(ஆ) மலர் உண்டு; பெயரும் உண்டு.

(இ) பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும்.

(ஈ) இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும்.

35. ''சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுஇன்றி விளங்கும் பாக்கம்'' எதுவென்பதைத் தேர்வு செய்க :

(அ) பட்டினப்பாக்கம் (ஆ) அத்திரம்பாக்கம்

(இ) மருவூர்ப்பாக்கம் (ஈ) மீனம்பாக்கம்

36. 'சேரமான் காதலி' என்னும் புதினத்திற்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவரைத் தேர்க.

(அ) கம்பதாசன் (ஆ) வாணிதாசன்

(இ) கண்ணதாசன் (ஈ) பாரதிதாசன்

37. கைப்பொருளைக் கொண்டு ஒருவர் செயலைச் செய்வதென்பது :

(அ) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வான்

(ஆ) அறனீனும் இன்பமும் ஈனும்

(இ) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

(ஈ) குன்றேறி யானைப்போர் கண்டற்றால்

38. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆகி, அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்ட கவிஞர் :

(அ) ஷேக்ஸ்பியர் (ஆ) ஷெல்லி

(இ) வேர்ட்ஸ்வொர்த் (ஈ) கீட்ஸ்

39. சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்க :

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களின் வரிசைமுறை :

(அ) கவை, கொம்பு, சினை, போத்து, கிளை

(ஆ) கவை, கொம்பு, கிளை, சினை, போத்து

(இ) கவை, சினை, கொம்பு, கிளை, போத்து

(ஈ) கவை, கொம்பு, போத்து, கிளை, சினை

40. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) பதனம் - கவனமாக

(ஆ) மகுளி - சலிப்பு

(இ) நீத்துப்பாகம் - மேல்கஞ்சி

(ஈ) பாச்சல் - பாத்தி

41. **கூற்று (1)** : பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை போன்றவற்றைப் புகழ்ந்துபாடுவது பாடாண் திணை.

**கூற்று (2)** : போரைப் பற்றிச் சொல்லாது பிற மாண்புகளை மட்டும் பாடுவது பொதுவியல் திணை.

(அ) **கூற்று (1)** சரி; **கூற்று (2)** தவறு

(ஆ) இரண்டு **கூற்றுகளும்** தவறு

(இ) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** சரி

(ஈ) இரண்டு **கூற்றுகளும்** சரி

42. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) யாமம் - இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

(ஆ) வைகறை - இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை

(இ) எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை

(ஈ) நண்பகல் - காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை

43. 'நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன' என்று நிரூபித்தவர் ________.

(அ) ஜான் வீலர் (ஆ) ஸ்டீபன் ஹாக்கிங்

(இ) வாட்சன் (ஈ) எட்வின் ஹப்பிள்

44. முறையான சீரமைப்புடைய திருக்குறளைத் தேர்க.

(அ) அப்பொருள் எத்தன்மைத் தாயினும் எப்பொருள்
அறிவு காண்பது மெய்ப்பொருள்.

(ஆ) மெய்ப்பொருள் அறிவு காண்பது எப்பொருள்
எத்தன்மைத் தாயினும் அப்பொருள்.

(இ) எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(ஈ) மெய்ப்பொருள் எத்தன்மைத் தாயினும் எப்பொருள்
அப்பொருள் காண்ப தறிவு.

45. இவ்வுலகத்தையே உரிமையாகக் கொண்டவரென்று வள்ளுவரால் குறிப்பிடப்படுபவர்.

(அ) நாடி முறைசெய்யா மன்னவர்

(ஆ) நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவர்

(இ) விரும்பத் தகுந்த இயல்பை உடைய பண்பாளர்

(ஈ) இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னர்

46. ''அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது
பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்'' என்று கூறியவர்.

(அ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

(ஆ) இளையான்குடி மாறநாயனார்

(இ) ஈழத்துப் பூதன் தேவனார்

(ஈ) பெருந்தலைச் சாத்தனார்

47. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | சமூகக் கருத்துகள் | (i) | உளியின் ஓசை |
| (2) | பெண்கள் முன்னேற்றம் | (ii) | திரும்பிப் பார் |
| (3) | அரசியல் | (iii) | பாசப்பறவைகள் |
| (4) | இலக்கியம் | (iv) | குறவஞ்சி |

(அ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(இ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

48. உதவி செய்தலைக் குறிப்பிட, ஈழத்துப் பூதன் தேவனார் பயன்படுத்தும் சொல் :

(அ) உதவியாண்மை (ஆ) உதவிப்பெருமை

(இ) உதவித்தன்மை (ஈ) உதவியுண்மை

49. **கூற்று (1)** : 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு, திருச்சி மன்னர் சந்தாசாகிப் அளித்தார்.

**கூற்று (2)** : 'இஸ்மத் சன்னியாசி' என்பது தூய துறவி என்னும் பொருள் கொண்ட அரபுச்சொல்.

(அ) **கூற்று (1)** சரி; **கூற்று (2)** தவறு

(ஆ) **கூற்றுகள்** இரண்டும் சரி

(இ) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** சரி

(ஈ) **கூற்றுகள்** இரண்டும் தவறு

50. இயற்கை கொலுவிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதன் தோற்றமாகக் கம்பன்கவி காட்டும் படலம் :

(அ) ஆற்றுப்படலம்
(ஆ) நாட்டுப்படலம்
(இ) கங்கைப்படலம்
(ஈ) கங்கை காண் படலம்

51. சரியான முறையில் அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) பண்டைத்தமிழர் விருந்தோம்பல் உள்ளங்களிலும் பண்பாடு இல்லங்களிலும் செழித்திருந்தது.

(ஆ) இல்லங்களிலும் உள்ளங்களிலும் பண்டைத்தமிழர் பண்பாடு விருந்தோம்பல் செழித்திருந்தது.

(இ) விருந்தோம்பல் பண்பாடு இல்லங்களிலும் உள்ளங்களிலும் பண்டைத்தமிழர் செழித்திருந்தது.

(ஈ) பண்டைத்தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.

52. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | Transcribe | (i) | மாறுதல் |
| (2) | Transfer | (ii) | செயல்படுத்துதல் |
| (3) | Transform | (iii) | படியெடுத்தல் |
| (4) | Transact | (iv) | உருமாற்றுதல் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

53. ''விரிந்தன கொம்பில் கொய்த
வீயென உள்ளம் வாட
எரிந்தன நுதிநச்சு அம்புண்டு
இரும்புழைப் புண்போல் நோகப்''
- உவமை உணர்த்தும் பொருளைத் தேர்க.

(அ) கிளையிலிருந்து பூ விழுந்து வாடுதல்
(ஆ) புண்பட்டு நோகுதல்
(இ) பிரிவின் துயரத்தால் வருந்துதல்
(ஈ) இயற்கையை எண்ணி வாடுதல்

54. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல் :
(அ) நற்றிணை
(ஆ) பரிபாடல்
(இ) அகநானூறு
(ஈ) குறுந்தொகை

55. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | நூலாசிரியர் | | நூல் |
|---|---|---|---|
| (1) | குமரகுருபரர் | (i) | வேதாரண்யப் புராணம் |
| (2) | கம்பர் | (ii) | பரமார்த்தகுரு கதைகள் |
| (3) | பரஞ்சோதி முனிவர் | (iii) | திருக்கை வழக்கம் |
| (4) | வீரமாமுனிவர் | (iv) | நீதிநெறி விளக்கம் |

(அ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
(ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

56. கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று என அழைக்கப்படுவது :
(அ) கோடை (ஆ) கொண்டல் (இ) தென்றல் (ஈ) வாடை

57. காற்று மாசடைவதைத் தடுக்கும் வழிமுறைகளுள் தவறானதைத் தேர்க.
(அ) மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளுதல்.
(ஆ) பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை தருதல்.
(இ) புதைவடிவ எரிபொருள்களைப் பயன்படுத்துதல்.
(ஈ) மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்துதல்.

58. 'மோப்பக்குழையும் அனிச்சம்' என்னும் உவமையால் விளக்கப்படும் கருத்து.
(அ) முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்றல்.
(ஆ) வறிய நிலையிலும் விருந்தளித்து மகிழ்தல்.
(இ) இரவில் விருந்தினர் வந்தாலும் வரவேற்று உணவிடல்.
(ஈ) அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணாமை.

59. **கூற்று** : இலக்கணக் கட்டுக் கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருக்கும் பா ஆசிரியப்பா.

**சான்று** : ஆசிரியப்பாவால் அமைந்துள்ள இலக்கியம் திருக்குறள்.

(அ) **கூற்று, சான்று** இரண்டும் சரி

(ஆ) **கூற்று** தவறு; **சான்று** சரி

(இ) **கூற்று** சரி; **சான்று** தவறு

(ஈ) **கூற்று, சான்று** இரண்டும் தவறு

60. இன்னிசை அளபெடைகளைத் தேர்ந்தெடுக்க.

(அ) கொடுப்பதூஉம், கெழீஇய
(ஆ) கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம்
(இ) துய்ப்பதூஉம், அசைஇ
(ஈ) கெழீஇய, அசைஇ

61. ''விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்''
- இவ்வடியில் இடம்பெற்ற சீர்எதுகை.

(அ) விருந்தினனாக - வியத்தல்
(ஆ) விருந்தினனாக - ஒருவன்
(இ) வியத்தல் - நன்மொழி
(ஈ) எதிரின் - உரைத்தல்

62. ''நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!''
- என்று கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய புலவர்.

(அ) காக்கைப் பாடினியார்
(ஆ) பொன்முடியார்
(இ) வெண்ணிக்குயத்தியார்
(ஈ) ஒக்கூர் மாசாத்தியார்

63. கொடைப் பெருமைகளுள் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

(அ) அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தல்

(ஆ) ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமை

(இ) மறுமை நோக்கிக் கொடுத்தல்.

(ஈ) நாள்தோறும் கொடுத்தல்.

64. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | குழல் மீன் கறி விருந்து | (i) | பொருநராற்றுப்படை |
| (2) | காலின் ஏழடிப் பின் சென்று | (ii) | நற்றிணை |
| (3) | சீறியாழைப் பணையம் வைத்து விருந்து | (iii) | சிறுபாணாற்றுப்படை |
| (4) | அல்லில் ஆயினும் விருந்து | (iv) | புறநானூறு |

(அ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஆ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(இ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

65. மதுரையில் கணவனை இழந்த கண்ணகி, மதுரையிலிருந்து வைகையின் தென்கரை வழியாகச் சென்ற குன்றம் :

(அ) கொல்லிமலை (ஆ) மருதமலை (இ) பழனிமலை (ஈ) சுருளிமலை

66. 'என்னா' என்பது எவ்வகைச் சொல் ?

(அ) இடைச்சொல் (ஆ) உரிச்சொல் (இ) அசைச்சொல் (ஈ) வினாச்சொல்

67. ''உய்முறை அறியேன்; ஓர்ந்த
உணர்வினொத்து உறுப்பும் இல்லா''

- இவ்வடியில் இடம்பெறும் 'ஓர்ந்த' என்னும் சொல்லின் பொருள்.

(அ) வாழும் வழி (ஆ) அசைந்து (இ) நினைத்த (ஈ) விலக்கி

68. 'மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்' என்னும் அச்சிடப்பெறாத நூல் இடம்பெற்றுள்ள நூலகம் :

(அ) இங்கிலாந்து தேசிய நூலகம் (ஆ) இலங்கை தேசிய நூலகம்
(இ) பிரான்சு தேசிய நூலகம் (ஈ) சிங்கப்பூர் தேசிய நூலகம்

69. **கூற்று** : ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தார்.

**காரணம்** : ம.பொ.சி. அவர்களின் அன்னையார் அம்மானைப் பாடல்களைப் பாடுவதோடு, ம.பொ.சி. அவர்களையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார்.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி
(ஆ) **கூற்று** சரி; **காரணம்** தவறு
(இ) **கூற்று** தவறு; **காரணம்** சரி
(ஈ) **கூற்று, காரணம்** இரண்டும் தவறு

70. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) வழங்குவதற்குப் பொருள் உள்ளதா என்று பார்க்காமல் கொடுப்பவர் - பெருஞ்சாத்தன்
(ஆ) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவர் - அதியன்
(இ) இரவலரைத் தேடிச்சென்று கொடுப்பவர் - திருமுடிக்காரி
(ஈ) மறுமை நோக்கிக் கொடுக்காதவர் - பேகன்

71. சரியான அகர வரிசையைத் தேர்க.

(அ) பாதிரி, பட்டினம், பேரூர், புன்னை, பொய்கை
(ஆ) பட்டினம், புன்னை, பாதிரி, பேரூர், பொய்கை
(இ) பாதிரி, பேரூர், புன்னை, பட்டினம், பொய்கை
(ஈ) பட்டினம், பாதிரி, புன்னை, பேரூர், பொய்கை

72. குழலி பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசை தட்டிச் சென்றார்.

- இத்தொடரின் வகையைத் தேர்க.

(அ) தொடர் சொற்றொடர் (ஆ) தனிச் சொற்றொடர்

(இ) கலவைச் சொற்றொடர் (ஈ) வினாச் சொற்றொடர்

73. மயங்கொலிப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அழைக்களிக்கப்படுகிறோம்.

(ஆ) நம்மைச் சுற்றி நிகலும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம்.

(இ) நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்களிக்கப்படுகிறோம்.

(ஈ) நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம்.

74. பொருத்தி விடையைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | நிரை நிரை நேர் | (i) | புளிமாங்கனி |
| (2) | நிரை நேர் நிரை | (ii) | கூவிளங்காய் |
| (3) | நேர் நிரை நேர் | (iii) | தேமாங்கனி |
| (4) | நேர் நேர் நிரை | (iv) | கருவிளங்காய் |

(அ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)

(ஆ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(இ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

(ஈ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)

75. கீழ்க்காண்பனவற்றுள் முதனிலைத் தொழிற்பெயரைத் தேர்ந்தெடுக்க.

(அ) உரை (ஆ) நடை (இ) சூடு (ஈ) பேறு

76. கண்ணகி வடித்த கஞ்சியில் சட்டையை அலசினாள்.

- அடிக்கோடிட்ட தொடரின் வகையைத் தேர்ந்தெடுக்க.

(அ) வினைமுற்றுத் தொடர் (ஆ) இடைச்சொல் தொடர்

(இ) வினையெச்சத் தொடர் (ஈ) பெயரெச்சத் தொடர்

77. ‘கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும்தானே’

- என்று விவேக சிந்தாமணி கூறக் காரணம்.

(அ) புறம் பேசுதல் (ஆ) முகம் கடுத்து உணவிடுதல்

(இ) இன்னாத கூறல் (ஈ) முகமன் வழங்காமை

78. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | Conversation | (i) | ஒப்பெழுத்து |
| (2) | Homograph | (ii) | உரையாடல் |
| (3) | Discussion | (iii) | மெய்யெழுத்து |
| (4) | Consonant | (iv) | கலந்துரையாடல் |

(அ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)
(ஆ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)
(இ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)
(ஈ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

79. ''கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காதும் அசைந்தாடக்''

- என்னும் பாடல் அடியில் அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு.

(அ) முற்றும்மை (ஆ) எண்ணும்மை
(இ) உயர்வு சிறப்பும்மை (ஈ) இழிவுச் சிறப்பும்மை

80. 'அல்லதை என் தமரால் என் பகைஞரால் கள்வரால் அரிய கானத்து' ..... யார், யாரிடத்துக் கூறியது ?

(அ) குலேசபாண்டியன் இடைக்காடனாரிடம்
(ஆ) இடைக்காடனார் குலேசபாண்டியனிடம்
(இ) இறைவன் குலேசபாண்டியனிடம்
(ஈ) குலேசபாண்டியன் இறைவனிடம்

81. இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு, நீங்கிச் சென்று தங்கிய இடம் :

(அ) தென்திரு ஆலவாயில் (ஆ) திருவெண்ணெய்நல்லூர்
(இ) வடதிரு ஆலவாயில் (ஈ) திருவழுந்தூர்

82. பொருந்திய இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) மான், காயா, மயில், சேரி - குறிஞ்சி
(ஆ) தாமரை, காஞ்சி, அன்னம், மூதூர் - மருதம்
(இ) தாழை, ஞாழல், பாக்கம், முதலை - முல்லை
(ஈ) குரவம், இலுப்பை, புறா, குறும்பு - நெய்தல்

83. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) வஞ்சித் திணை - மண்ணாசை கருதி போருக்குச் செல்வது
(ஆ) வெட்சித் திணை - ஆநிரை கவர்தல்
(இ) நொச்சித் திணை - வலிமையை நிலைநாட்டல்
(ஈ) கரந்தைத் திணை - ஆநிரை மீட்டல்

84. ஓரசைச் சீரில் முடியும் பாவினைத் தேர்ந்தெடுக்க.

(அ) வெண்பா (ஆ) ஆசிரியப்பா (இ) கலிப்பா (ஈ) வஞ்சிப்பா

85. ''பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.''
- இவ்வடிகளில் வெளிப்படும் பண்பு.
(அ) ஈகை (ஆ) வீரம் (இ) விருந்தோம்பல் (ஈ) கூடி வாழ்தல்

86. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.
- இக்குறளில் பயின்று வரும் அணி.
(அ) தீவக அணி
(ஆ) எடுத்துக்காட்டு உவமையணி
(இ) உருவக அணி
(ஈ) சொல் பின்வரு நிலையணி

87. சொல்லோடு பொருளைப் பொருத்தி விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| (1) | தமர் | (i) | வாழை |
| (2) | பனுவல் | (ii) | குளிர்ந்த |
| (3) | கதலி | (iii) | உறவினர் |
| (4) | தண்ணிய | (iv) | நூல் |

(அ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)
(ஆ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
(இ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)
(ஈ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

88. பூங்குழல் வந்தாள் என்பது :
(அ) அன்மொழித்தொகை
(ஆ) உம்மைத்தொகை
(இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
(ஈ) வினைத்தொகை

89. **கூற்று** : முற்றுப் பெறாத வினை, வினைச் சொல்லைக் கொண்டு முடிவது வினையெச்சத் தொடர் ஆகும்
**சான்று** : பார்த்த படம்
(அ) **கூற்றும் சான்றும்** சரி
(ஆ) **கூற்று** சரி; **சான்று** தவறு
(இ) **கூற்றும் சான்றும்** தவறு
(ஈ) **கூற்று** தவறு; **சான்று** சரி

90. முன்னிலை வினையைத் தேர்ந்தெடுக்க.
(அ) நீவிர் (ஆ) வந்தேன் (இ) வந்தனர் (ஈ) வந்தீர்

91. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | அகவலோசை | (i) | தாழ்ந்து உயர்ந்து வரும் ஓசை |
| (2) | துள்ளலோசை | (ii) | தாழ்ந்தே வரும் ஓசை |
| (3) | தூங்கலோசை | (iii) | இருவர் உரையாடுவது போன்ற ஓசை |
| (4) | செப்பலோசை | (iv) | சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை |

(அ) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(ஆ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)

(இ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)

(ஈ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

92. கட்டுரை படித்தான். - இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு.

(அ) இரண்டாம் வேற்றுமை உருபு

(ஆ) மூன்றாம் வேற்றுமை உருபு

(இ) நான்காம் வேற்றுமை உருபு

(ஈ) ஐந்தாம் வேற்றுமை உருபு

93. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

(ஆ) பொது அறிவு நூல்களைத் தேடி படித்தவர் போட்டி தேர்வில் வென்றார்.

(இ) பொது அறிவு நூல்களைத் தேடி படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

(ஈ) பொது அறிவு நூல்களை தேடிப் படித்தவர் போட்டித்தேர்வில் வென்றார்.

94. ''திணை-தினை'' - பொருள் வேறுபாடறிந்து பொருத்தமான விடையைத் தேர்க.

(அ) திண்ணை - ஒழுக்கம்

(ஆ) சிறுதானியம் - ஒழுக்கம்

(இ) ஒழுக்கம் - சிறுதானியம்

(ஈ) சிறுதானியம் - திண்ணை

95. **கூற்று (1)** : அன்புடைய தலைவன், தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது அகத்திணை

**கூற்று (2)** : அகத்திணை ஐந்து வகைப்படும்

(அ) **கூற்றுகள்** இரண்டும் சரி

(ஆ) **கூற்று (1)** சரி; **கூற்று (2)** தவறு

(இ) **கூற்று (1)** தவறு; **கூற்று (2)** சரி

(ஈ) **கூற்றுகள்** இரண்டும் தவறு

96. அரசர்கள் இருவரும் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் எதிர்த்துப் போரிடும்போது சூடும் பூ :

(அ) வெட்சி (ஆ) நொச்சி (இ) உழிஞை (ஈ) தும்பை

97. ''காழியர், கூவியர், கள்நொடை ஆட்டியர்,

மீன்விலைப் பரதவர், வெள்உப்புப் பகருநர்''

- இவ்வடிகளில் 'பிட்டு விற்போர்,' 'அப்பம் விற்போர்' என்னும் பொருள்தரும் சொற்கள் முறையே :

(அ) கள்நொடை ஆட்டியர், மீன்விலைப் பரதவர்

(ஆ) கூவியர், காழியர்

(இ) காழியர், கூவியர்

(ஈ) பகருநர், கூவியர்

98. பழமொழியைத் தமிழ் எண்களால் நிறைவு செய்க.

நொறுங்கத் தின்றால் _________ வயது.

(அ) உ௦௦ (ஆ) ச௦௦ (இ) அ௦௦ (ஈ) க௦௦

99. பின்வருவனவற்றுள் கூட்டுநிலைப் பெயரெச்சத்தைத் தேர்க.

(அ) பழகிய மனிதன் (ஆ) படித்த பாடம்

(இ) கேட்க வேண்டிய பாடல் (ஈ) மற்றொன்று கிடைத்தது

100. பொருந்தாத இணையைத் தேர்க.

(அ) பனை - ஓலை

(ஆ) கரும்பு - தோகை

(இ) புளி - இலை

(ஈ) சோளம் - தாள்

- o 0 o -

## SPACE FOR ROUGH WORK